Judicial Form No. 53
[See Rule 42]
DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
.............
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE,PAPPIREDDIPATTI

| | |
|---|---|
| Case No. | **MC.No. 3/2026** |
| Deposition of | PW 1 |
| Name | : ராது |
| Father's Name/Husband Name | : ஜான்சன் |
| Village | : வெங்கடசமுந்திரம் |
| Taluk | : பாப்பிரெட்டிப்பட்டி |
| District | : தருமபுரி |
| Religion | : Hindu |
| Age | : 35 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the **02.07.2026**

**எதிர்மனுதாரர் ஆஜர் எதிர்மனுதாரர் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.**

**சாட்சி சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டார்.**

**எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை**

நான் இந்த வழக்கை எதிர்மனுதாரரிடம் ஜீவனம்சம் கோரி தாக்கல் செய்துள்ளேன்.

நான் முதுகலை பொறியியல் படித்துள்ளேன்.

எனக்கு எதிர்மனுதாரரை 2009 ம் ஆண்டு முதல் தெரியும்.

நான் இளங்கலை பொறியியல் படித்துக்கொண்டிருந்த காலங்களில் எதிர்மனுதாரரிடம் நண்பராக பழகி வந்தேன்.

2009 ம் ஆண்டு முதல் எதிர்மனுதாரரை காதலித்து வந்தேன்.

முதுகலை பொறியியல் நான் வேறு கல்லூரியிலும் எதிர்மனுதாரர் வேறு கல்லூரிலும் படித்தார் என்றால் சரிதான்.

நானும் எதிர் மனுதாரரும் காதலித்து வீட்டில் சம்பதம் பெற்று திருமணம் செய்துக்கொண்டோம்.

திருமணத்தின்போது எதிர்மனுதாரருக்கு எங்கள் வீட்டுத்தரப்பிலிருந்து 3 1/2 பவுண்

நகை செய்தோம். அதில் 2 பவுண் செயின் மற்றும் 1 1/2 பவுண் பிரேஸ்லேட் ஆகும்.

எதிர்மனுதாரர் திருமணத்தின்போது 5 பவுண் செயின் மற்றும் 1/2 பவுண் தாலி எனக்கு செய்தார் என்றால் சரிதான், ஆனால் செயின் எத்தனை பவுண் என்று எனக்கு சரியாக தெரியாது.

திருமணசெலவுகள் இரண்டு வீட்டுதரப்பும் சேர்ந்துதான் செய்தார்கள் என்றால் சரியல்ல, என் வீட்டுதரப்புதான் முழு செலவையும் செய்தார்கள்.

நான் வழக்கிற்காக திருமணச்செலவை என் வீட்டுத்தரப்பு மட்டும் தான் செய்தார்கள் என்று பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல.

திருமணத்திற்கு பின்னிட்டு எதிர்மனுதாரருடன் ஈட்டியம்பட்டியில் ஒரு மாதம் தான் குடும்பம் நடத்தினேன் என்றால் சரிதான். ஆனால் அதன் பிறகு 1 1/2 வருடங்கள் அரூர் பாரதியார் நகரில் எதிர்மனுதாரருடன் கூட்டுக்குடும்பமாக வசித்து வந்தேன்.

2017 ம் ஆண்டு முதல் 2019 ம் ஆண்டு வரை எதிர்மனுதாரருடன் கூட்டுக்குடும்பமாக வாழ்ந்து வந்தேன் என்றால் சரிதான்.

நான் 2019 ம் ஆண்டிற்க்கு பிறகு எதிர்மனுதாரருடன் பிரச்சனை செய்துவிட்டு எனது அம்மாவின் வீட்டிற்கு சென்றுவிட்டேன் என்றால் சரியல்ல. நானும் எதிர்மனுதாரரும் அரூரில் 2024 ம் ஆண்டு வரை தனிக்குடுத்தனம் செய்தோம்.

எதிர்மனுதாரருடன் சண்டை போட்டுக்கொண்டு அடிக்கடி எனது அம்மா வீட்டிற்கு சென்றேன் என்றால் சரியல்ல.

2017 ம் ஆண்டு முதல் 2018 ம் ஆண்டு வரை சங்கரியில் நாலேஜ் இன்ஜினெரிங் கல்லூரில் வேலை பார்த்து வந்தேன் என்றால் சரிதான். அப்போது நான் 18,000 சம்பலம் பெற்றுவந்தேன் என்றால் சரிதான்.

நான் கல்லூரியில் வேலை பார்த்த மேற்கண்ட காலக்கட்டத்தில் எதிர்மனுதாரரின் அம்மா தான் அனைத்து தேவையான சாப்பாடுகளை தயார் செய்து கொடுப்பார் என்றால் காலை உணவு நான்தான் செய்வேன், மாலை மட்டும் தான் எனது மாமியார் செய்வார்.

எனது மாமியார் என்னை நல்லப்படியாக தான் பார்த்துக்கொண்டார் என்றாலும் அவர் எனது சாதியை வைத்து எப்போதும் பேசியது இல்லை என்றாலும் சரியல்ல.

திருமணத்திற்கு பின்னிட்டு எதிர்மனுதாரர் சீனிவாசா என்ற கல்லூரியில் பேராசிரியராக இருந்தார் என்றால் சரிதான், தற்போது தலைமை பேராசிரியராக பணியாற்றி வருகிறார்.

2019 ம் ஆண்டு காலக்கட்டத்தில் எனது கணவர் என்னை அடித்ததின் காரணமாக

நான் 1 மாதகாலம் எனது அம்மா வீட்டில் இருந்தார் என்றால் சரிதான்.

2019 ம் ஆண்டு நான்தான் எதிர்மனுதாரருடன் சண்டை போட்டு எனது அம்மா வீட்டிற்கு சென்றேன் என்றால் சரிதான்.

2019 ம் ஆண்டு எதிர்மனுதாரர் அரூர் சார்பு நீதிமன்றத்தில் எனக்கு எதிராக விவகாரத்து மனு தாக்கல் செய்தார் என்றால் சரிதான், ஆனால் விவகாரத்து மனுவை தாக்கல் செய்துவிட்டு அவரே அதை திரும்பப்பெற்றுக்கொண்டார்.

2019 ம் ஆண்டில் விவகாரத்து வழக்கு தாக்கல் செய்ததின் பின்னிட்டு நான் எதிர் மனுதாரருக்கு எதிராக அரூர் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன் என்றால் சரிதான்.

நான் எதிர்மனுதாரருடன் அரூரில் தனிக்குடுத்தனம் செய்து வந்த காலத்தில் வீட்டிற்கு தேவையான அனைத்து காரியங்களையும் நானேதான் பார்த்துக்கொண்டேன்.

2020ம் ஆண்டு நான் அரூர் இன்டர்நேஷனல் பள்ளியில் ஆசிரியராக பணிபுரிந்தேன் என்றால் சரியல்ல.

2022 ம் ஆண்டு நான் அரூர் IPS பள்ளியில் ஆசிரியாராக வேலை செய்தேன் என்றால் சரிதான், அப்போது எனது சம்பளம் 10,000 ஆகும்.

நான் அரூரில் எதிர்மனுதாரருடன் தனிக்குடுத்தனம் செய்தபோது எனது அண்ணன் மற்றும் எனது பெற்றோர்கள் எதிர்மனுதாரரரை அடித்து காயம் படுத்தினார் என்றால் சரியல்ல.

2022 ம் ஆண்டு முதல் எதிர்மனுதாரரர் என்னை பிரிந்து வாழ்ந்து வருகிறார் என்றால் சரியல்ல, 2024 ம் ஆண்டு அக்டோபர் மாதம் வரை என்னுடன் தான் இருந்தார்.

**எதிர்மனுதாரர் வழக்கறிஞரின் வேண்டுகோலுக்கிணங்க குறுக்கு விசாரணை தள்ளி வைக்கப்படுகிறது.**

**மேற்படி சாட்சியம் என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டு, பதிவு செய்யப்பட்ட சாட்சியம் சாட்சிக்கு படித்துக்காட்டி அவர் சரி என ஒப்புக்கொண்டு என் முன்னர் கையொப்பம் செய்தார்.**

**நீதித்துறை நடுவர் பாப்பிரெட்டிபட்டி.**